# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1443/5 - 2006 මැයි 02 වැනි අඟහරුවාදා - 2006.05.02

1443/5 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 BB (4) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

இரத்தினபுரி மாவட்ட அயகம பிரதேச செயலாளர் பிரிவில் அமையவுள்ள நுகதொல சிறிய நீர் மின்சாரச் செயற்றிட்டம் - கொள்திறன் 500KW

**ஆற்று நீர் மறிப்பு வழித்தோடல் தெரிவு**

ஆரம்ப சுற்றாடல் அறிக்கை, மேற்படி செயற்றிட்டம் தொடர்பான பிற ஆய்வுகள் இன்னும் நோக்கு குழு உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த விமர்சன மீளாய்வு மற்றும் அத்தகைய விமர்சனங்கள் தொடர்பில் செயற்றிட்டத்தை மேற்கொள்ளவிருக்கும் தரப்பின் வரவேற்புகள் போன்ற விடயங்களின் பின்னர், 2000 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதியின் (செயற்றிட்டங்கள் அங்கீகாரத்திற்கான நடவடிக்கைமுறை) 13 (I) ஆம் நியதியின் பிரகாரமும், குறித்த விதிகள் நிபந்தனைகளுக்கு அமையவும் மின்வலு, சக்தி அமைச்சு மேற்படி செயற்றிட்ட அமுலாக்கத்திற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்பதை இதன் மூலம் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

எம். எம். சி. பெர்டினாந்து,
செயலாளர்,
மின்வலு, சக்தி அமைச்சு.

கொழும்பு,
2006, ஏப்பிறல் 28.

5-198